05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# NILAI- NILAI ESTATIKA DALAM LAGU-LAGU SUCI THIRUNAVUKKARASAR

**JIVA A/L NATHAN**

**TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA SASTERA (KESUSASTERAAN TAMIL) MOD PENYELIDIKAN**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**FAKULTI BAHASA DAN KOMUNIKASI**
**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**
**2018**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**NILAI-NILAI ESTATIKA DALAM LAGU-LAGU SUCI THIRUNAVUKKARASAR**

## ABSTRAK

Kajian ini bertujuan untuk mengenal pasti nilai-nilai estatika dalam lagu-lagu suci Thirunavukkarasar. menganalisi nilai estatika dan menganalisis keindahan yang terdapat dalam lagu-lagu suci Thirunavukkarasar. Thirunavukkarasar merupakan penganut Hindu yang dikenali pada abad ke-6. Kajian ini dijalankan berasaskan perpustakaan. Pendekatan kualitatif telah digunakan dalam kajian ini. Pengkaji menggunakan 4 ciri-ciri estatika berasaskan teori Immanual Kant. Sebanyak 42 patikam daripada thirumurai keempat menjadi sumber utama dalam kajian ini. Hasil kajian menunjukkan bahawa lagu-lagu suci Thirunavukkarasar mengandungi nilai-nilai estatika yang dinyatakan dalam teori Immanual Kant. Pengkaji menggunakan teori estetika Immanual Kant dalam kajian ini untuk mengkaji nilai-nilai estatika. Kesimpulan kajian membuktikan bahawa lagu-lagu suci Thirunavukkarasar mengandungi nilai-nilai estatika .

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**AESTHETIC THOUGHTS IN THIRUNAVUKKARASAR'S SONGS**

## ABSTRACT

This study aims to identify aesthetics thoughts in Thirunavukkarasar's songs, analysis aesthetics thoughts and analysis natural in Thirunavukkarasar's songs. Thirunavukkarasar is a saint from 6th century. This study is based on qualitative analysis and the data for this study have been collected through descriptive methods. Descriptive analysis describes the aesthetics thoughts in Thirunavukkarasar songs The aesthetic theory put forward in the Immanuel Kant's text is used for this study. Researcher used 4 elements from Immanuel Kant's theory for this research. 42 *pathikam* of 4th chapter from Thirunavukkarasar's songs and Immanuel Kant's theory was used as primary source of the research. The aesthetic thoughts was analyze according to Immanuel Kant's aesthetic theory. The finding shows that Thirunavukkarasar songs contain aesthetic thoughts. As a conclusion this research proved that the Thirunavukkarasar songs contain aesthetic thoughts. This study prevails the relationship between Thirunavukkarasar songs and aesthetic thoughts.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## திருநாவுக்கரசர் பாடல்களில் அழகியல்

## ஆய்வுச் சாரம்

திருநாவுக்கரசர் பாடல்களில் அழகியல் கூறுகளைக் கண்டறிதல் இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. திருநாவுக்கரசர் 63 நாயன்மார்களில் ஒருவராவார். நாயன்மார்களின் முதல் மூலக் கடவுளாக விளங்குபவர் சிவபெருமான் ஆகும். நாயன்மார்கள் சிவபெருமானைத் தோத்திர பாடல்கள் பாடி வழிப்பட்டனர். திருநாவுக்கரசர் தாச மார்க்கத்தின் வழி சிவபெருமானை அடைந்தார். ஆரம்பக்காலக்கட்டத்தில் திருநாவுக்கரசர் சைவ சமயத்தில் இருந்து சைன சமயம் தழுவினார். சூலை நோய் ஏற்பட்ட பின்பே சிவபெருமானின் அருளால் சைவ சமயம் சார்ந்தார். மேலும், தாசமார்க்கத்தை மேற்கொண்ட ஒருவர் இவ்வுலகை மற்றும் இறைவனை அழகியல் உணர்வோடு பார்த்திருக்கின்றாரா என்பது ஆய்விற்குரிய ஒரு கருத்தாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வாளர், இம்மானுவேல் காண்ட் அவர்களின் அழகியல் கோட்பாட்டின் வழி திருநாவுக்கரசரின் பாடல்களில் அழகியல் கூறுகளை ஆராய்ந்தார். திருநாவுக்கரசர் தேவாரத்தின் நான்காம் திருமுறையின் 42 பதிகங்களை முதன்மை ஆதரமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. திரட்டப்பட்ட தகவலின்படி, திருநாவுக்கரசர் பாடல்களில் அழகியல் சிந்தனை உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**பொருளடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| ஆய்வாளர் உறுதிமொழி | | ii |
| நன்றிவுரை | | iii |
| ஆய்வுச் சாரம் | | iv |
| பொருளடக்கம் | | v |
| வரைபடப் பட்டியல் | | |
| சுருக்கப்பட்டியல் | | |
| **இயல் 1:** | **அறிமுகம்** | |
| 1.1 | முன்னுரை | 1 |
| 1.2 | ஆய்வுப்பின்னணி | 1 |
| 1.3 | ஆய்வின் சிக்கல் | 9 |
| 1.4 | ஆய்வின் முக்கியத்துவம் | 10 |
| 1.5 | ஆய்வு நோக்கம் | 11 |
| 1.6 | ஆய்வு வினா | 12 |
| 1.7 | ஆய்வின் எல்லை | 12 |
| 1.8 | ஆய்வு ஆதாரங்கள் | 13 |
| 1.8.1 | முதன்மை ஆதாரம் | 13 |
| 1.8.2 | துணைமை ஆதாரம் | 13 |
| 1.9 | முக்கியக் கலைச்சொற்களின் விளக்கம் | 14 |
| 1.9.1 | அழகியல் | 14 |
| 1.10 | தொகுப்புரை | 15 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**இயல் 2** **முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 16

2.2 தேவாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வேடுகள் 16

2.3 அழகியலை அடிப்படையாகக் கொண்ட ஆய்வேடுகள் 25

2.4 ஆய்வுக் கட்டுரைகள் 27

2.5 ஆய்வு நூல்கள் 29

2.6 தொகுப்புரை 30

**இயல் 3** **ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 32

3.2 ஆய்வு வடிவமைப்பு 32

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.3 ஆய்வு அணுகுமுறை 35

3.4 ஆய்வுக் கட்டமைப்பு 35

3.5 தரவு சேகரிக்கும் முறை 36

3.6 தரவுப் பகுப்பாய்வு முறை 36

3.7 ஆய்வுக் கோட்பாடு 36

3.7.1 எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் கிடைக்கும் இன்பமே அழகு 39

3.7.2 உலகளவில் உணரக் கூடிய இன்பம் 39

3.7.3 நோக்கத்தின் அடிப்படையிலான இன்பம் 40

3.7.4 புறத் தோற்ற அழகு 41

3.8 கோட்பாட்டு வடிவமைப்பு 42

3.9 ஆய்வு நடைமுறை 43

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


| | | |
|---|---|---|
| 3.10 | தொகுப்புரை | 44 |
| **இயல் 4** | **தரவுப் பகுப்பாய்வு** | |
| 4.1 | முன்னுரை | 45 |
| 4.2 | எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் கிடைக்கும் இன்பமே அழகு | 46 |
| 4.3 | உலகளவில் உணரக் கூடிய இன்பம் | 50 |
| 4.3.1 | சிவபெருமானின் திருவடி | 50 |
| 4.3.2 | சிவபெருமான் அணிந்திருக்கும் கச்சி | 55 |
| 4.3.3 | சிவபெருமான் அணிந்த துகில் | 56 |
| 4.3.4 | சிவபெருமானின் கைகள் | 57 |
| 4.3.5 | சிவபெருமான் மார்பில் இருக்கும் அணிகலன் | 58 |
| 4.3.6 | சிவபெருமானின் முகம் | 59 |
| 4.3.7 | சிவபெருமானின் நெற்றிக்கண் | 60 |
| 4.3.8 | சிவபெருமானின் நடனத்திருக்காட்சி | 60 |
| 4.3.9 | சிவபெருமான் பண்புகள் | 61 |
| 4.4 | நோக்கத்தின் அடிப்படையிலான இன்பம் | 63 |
| 4.4.1 | இறைநம்பிக்கை | 63 |
| 4.4.2 | அறிவுரை கூறுதல் | 67 |
| 4.5 | புறத்தோற்ற அழகு | 73 |
| 4.5.1 | இறைவனின் தோற்றம் | 73 |
| 4.5.1.1 | சிவபெருமானின் தோற்றப்பொலிவு | 75 |
| 4.5.1.2 | சிவபெருமானின் திருவடி | 77 |
| 4.5.1.2.1 | பொன்னடி | 79 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


| | | |
|---|---|---|
| 4.5.1.2.2 | கழலடி | 80 |
| 4.5.1.2.3 | மலரடி | 82 |
| 4.5.1.3 | ஆடை | 83 |
| 4.5.1.3.1 | புலித்தோல் | 84 |
| 4.5.1.3.2 | யானைத் தோல் | 86 |
| 4.5.1.3.3 | கோவணம் | 89 |
| 4.5.1.3.4 | பட்டு | 92 |
| 4.5.1.4 | சிவபெருமானின் மார்பு | 93 |
| 4.5.1.4.1 | சிவபெருமான் மார்பின் தோற்றம் | 93 |
| 4.5.1.4.2 | சிவபெருமான் திருநீறிட்டிருத்தல் | 94 |
| 4.5.1.4.3 | சிவபெருமான் பூணூல் அணிந்திருந்தமை | 96 |
| 4.5.1.4.4 | சிவபெருமான் கொன்றைமாலை அணிந்துள்ளமை | 96 |
| 4.5.1.4.5 | சிவபெருமான் அணிகலன் அணிந்திருப்பவன் | 98 |
| 4.5.1.5 | சிவபெருமான் தோள் | 101 |
| 4.5.1.6 | சிவபெருமானின் கைகள் | 103 |
| 4.5.1.7 | சிவபெருமானின் கழுத்து | 107 |
| 4.5.1.8 | சிவபெருமானின் தலை | 110 |
| 4.5.1.8.1 | சிவபெருமானின் சடை | 110 |
| 4.5.1.8.2 | சிவபெருமான் சடையில் பிறை | 113 |
| 4.5.1.8.3 | கங்கை | 116 |
| 4.5.1.8.4 | சடையும் பிறையும் | 118 |
| 4.5.1.8.5 | பாம்பு | 119 |
| 4.5.1.9 | சிவபெருமானின் காது | 120 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


| | | |
|---|---|---|
| 4.5.1.10 | சிவபெருமானின் நெற்றிக்கண் | 122 |
| 4.5.1.11 | சிவபெருமானின் மேனியின் வண்ணம் | 123 |
| 4.5.1.12 | உமையொருபாகன் | 126 |
| 4.5.1.13 | பிச்சாடனர் | 129 |
| 4.5.2 | இயற்கை | 133 |
| 4.5.2.1 | தேவாரத்தில் இயற்கை | 135 |
| 4.5.2.2 | திருத்தலங்களில் இயற்கைச் சூழல் | 136 |
| 4.5.2.2.1 | நதி | 136 |
| 4.5.2.2.2 | வயல்வெளிகள் | 141 |
| 4.5.2.2.3 | சோலைகள் | 146 |
| 4.5.2.2.4 | மரங்கள் | 150 |
| 4.5.2.2.5 | தாமரை | 153 |
| 4.5.2.2.6 | பறவைகள் | 157 |
| **இயல் 5** | **தொகுப்புரையும் கருத்துரையும்** | |
| 5.1 | முன்னுரை | 161 |
| 5.2 | ஆய்வின் சுருக்கம் | 161 |
| 5.3 | ஆய்வின் கண்டுபிடிப்புகள் | 162 |
| 5.3.1 | எவ்வித எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் கிடைக்கும் இன்பமும் அழகு என்ற அழகியல் சிந்தனை திருநாவுக்கரசர் பாடலில் வெளிப்பட்டுள்ளது. | 163 |
| 5.3.2 | உலகளவில் உணரக்கூடிய இன்பமும் அழகு என்ற அழகியல் சிந்தனை திருநாவுக்கரசர் பாடல்களில் வெளிப்பட்டுள்ளது. | 164 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


| | | |
|---|---|---|
| 5.3.3 | நோக்கத்தின் அடிப்படையிலான இன்பம் என்ற அழகியல் சிந்தனையும் திருநாவுக்கரசர் பாடல்களில் புலப்படுகின்றது. | 165 |
| 5.3.4 | புறத்தோற்ற அழகு என்ற சிந்தனையும் திருநாவுக்கரசர் பாடல்களில் காணப்படுகின்றது. | 166 |
| 5.4 | ஆய்வின் முடிவு | 167 |
| 5.5 | எதிர்கால ஆய்வுக்களங்கள் | 169 |
| 5.6 | முடிவுரை | 169 |
| மேற்கோள்நூல்கள் | | 171 |
| பின்ணினைப்பு | | |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**வரைபடப் பட்டியல்**


| **எண்** | **தலைப்பு** | **பக்கம்** |
|---|---|---|
| 3.1 | ஆய்வு வடிவமைப்பு | 34 |
| 3.2 | ஆய்வுக் கட்டமைப்பு | 35 |
| 3.3 | ஆய்வுக் கோட்பாட்டுக் கட்டமைப்பு | 42 |
| 3.4 | ஆய்வு நடைமுறை | 43 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# இயல் 1

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## அறிமுகம்

### 1.1 முன்னுரை

அறிமுகம் எனும் இவ்வியல், ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு முக்கியத்துவம், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு எல்லை, ஆய்வு ஆதாரம், ஆய்வு முக்கியச் சொற்கள் ஆகியவற்றை எடுத்துரைப்பதாக அமைந்தது.

### 1.2 ஆய்வுப் பின்னணி

மக்களுக்காக, அவர்களின் வாழ்க்கையை வெளிப்படுத்தும், மேம்படுத்தும் கலை படைப்பு இலக்கியம் ஆகும். ‘இலக்கியம் என்பது மக்களுக்கெல்லாம் பொதுவாகப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பயன்படும் பொருளை உடையதாக இனிய வகையில் சொல்லப்படுவதாக இருத்தல் வேண்டும்; சொற்கட்டுச் சிறந்து இன்பம் பயத்தலைக் குறிக்கோளாகப் பெற்றிருத்தல் வேண்டும். மேலும், மக்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறும் செய்யுள்களோ நூல்களோ படிக்கும்போது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, அவரது வாழ்க்கையையும் வழிப்படுத்த வல்லன. இவையே இலக்கியம் எனப்படும்' (இராசமாணிக்கனார். மா, 1963,ப:39).

இலக்கியமும் தான் தோற்றிய காலத்து நாட்டின் நிலையினையும், மக்களின் அன்றாட வாழ்வியலையும், பழக்க வழக்கங்களையும், வழிபாட்டு நெறிமுறைகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் அறிவிக்கும் களஞ்சியமாகத் திகழ்கின்றது. 'உள்ளத்திலிருந்து எழும் உரையில் தூய்மையும், செயலில் தூய்மையும் ஒருங்கே கொண்ட தமிழர், மனத்துக்கண் மாசற்றவர்களாகத் திகழ்ந்து, அல்வழி விடுத்து, நல்வழி நின்று, அறத்தை உயிரினும் மேலாகப் போற்றி, உழைப்பையும், உறுதியையும், கையாண்டு வாழ்ந்து வந்தனர்'(விஜயலெட்சுமி. வெ, 2010, ப:2). இதனை வரலாற்றுப் பதிவாகக் கூறுவதே இலக்கியம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

'தமிழ் இலக்கியம் ஏறக்குறைய இருபத்தைந்து நூற்றாண்டுகளின் வரலாறு உடையது'(வரதராசன். மு, 2009, ப:20). ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இயற்றப்பட்ட இலக்கியங்கள் தமிழ்மொழியின் பெருமையையும் தொன்மையையும் பறைசாற்றுகின்றன. இலக்கியங்களில் தமிழ்மொழி நீண்டதோர் இலக்கிய வரலாறு படைத்த மொழி ஆகும். வாழ்வின் பல்வேறு கூறுகளையும் தத்துவங்களையும் அடிப்படையாகக் கொண்டும் தமிழ் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வரலாற்றுச் சிறப்பு மிக்க தொன்மையான மொழியான தமிழ்மொழியில் பல வகை இலக்கியங்கள் ஒவ்வொரு காலத்திலும் படைக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியப் படைப்புகள் உலகின் தொன்மை வாய்ந்த இலக்கியங்களில் சிறந்தனவாகத் திகழ்கின்றன (வரதராசன். மு, 2009, ப:20). தமிழ் இலக்கியங்கள் ஐந்து பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை தமிழ் சங்க இலக்கியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், தற்கால இலக்கியம் ஆகியவனவாகும் (வரதராசன். மு, 2009, ப:28).

சங்க காலத்திற்குப் பிறகு சங்கம் மருவிய காலம் தோன்றியது. இதனைப் பக்தி இலக்கியக் காலமாகவும் குறிப்பிடப்படுகிறது. ‘கி.பி. 574 முதல் கி.பி. 900 வரை உள்ள பல்லவர் காலத்தில் தோன்றியது பக்தி இலக்கியம்’(விஜயலெட்சுமி. ஹரி, 2011, ப:138). தமிழிலக்கிய வரலாற்றின் இருண்டகாலம் என்றழைக்கப்படும் கி.பி. மூன்று முதல் ஆறாம் நூற்றாண்டை அடுத்து, தெற்கே நின்றசீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னன் களப்பிரர்களை வென்று ஆட்சியைக் கைப்பற்றினார். பல்லவர்கள் தொண்டை மண்டலம் உள்ளிட்ட பல பகுதிகளைக் கல்வியிற்கரையிலா காஞ்சி மாநகரைத் தலைநகரமாகக் கொண்டு செல்வாக்கோடு ஆட்சி புரிந்தனர். இவர்களின் ஆட்சி காலத்தில் புத்தமதம் பொலிவிழந்தது. ஏழாம் நூற்றாண்டு வரை சமண சமயம் செல்வாக்கோடு திகழ்ந்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பாண்டியன் நெடுமாறன், சமண மதத்தைத் தழுவியிருந்து, பின் சைவத்திற்கு மாறியவர் என்பது வரலாறு. பல்லவர்கள் வடமொழியை ஆதரித்தனர். அவர்கள் காலத்துக் கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் வடவெழுத்துக்கள் விரவி எழுதப்பட்டன. பின்னாளில் வடமொழியும் தமிழும் கலந்து மணிப்பிரவாளம் என்ற நடை உருவாகவும் இது வழிவகுத்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


'கி.பி. 7, 8, 9- ஆம் நூண்டுகளில் சைவ சமய நாயன்மார்களும் வைணவ சமய ஆழ்வார்களும் தத்தம் சமயங்களின் எழுச்சிக்கு வித்திட்டனர்' (விஜயலெட்சுமி. ஹரி, 2011, ப:139). சைவ சமய நாயன்மார்கள் 63 பேர் ஆவர். நாயன்மார்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், ஆகிய மூவர் முதன்மையாகச் சைவ சமயத்தைப் பாடல்கள் பாடி வளர்த்தனர். வைணவ சமயத்தில் பன்னிரு ஆழ்வார்களும் தங்களின் சமயத்தைப் போற்றிப்பாடினர். இவர்களில் முதன்மை ஆழ்வார்களாகப் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வைணவத்தைப் பரப்பினர் (விஜயலெட்சுமி. ஹரி, 2011, ப:161).

நாயன்மார்களின் பாடல்களும் ஆழ்வார்களின் பாடல்களும் தோத்திர பாடல் ஆகும். தோத்திரம் என்பதற்கு இறைவனின் புகழையும், சிறப்பையும் பாடி வாழ்த்துதல் எனப்பொருள் கொள்ளலாம். மேலும், இப்பாடல்களை அருட்பாடல்கள் என்றும் பாமாலைகள் என்றும் கூறுவர். இறைவனின் அருள் பெற்ற அடியார்கள் பாடியதால் அருட்பாடல்கள் என்றழைக்கப்பட்டன. இறைவனுக்குப் பூமாலைகள் அணிவித்து கண் குளிரக்கண்டு மன மகிழ்கின்றோமே அது போல பாமாலைகளையும் பாடி இறைவனுடன் ஒன்றிவிட முடியும் என உமாபதிசிவம் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

'பூமாலைகள் உடனே வாடிவிடும். ஆனால், பாமாலைகள் என்றும் இறைவனின் புகழை மணக்கச் செய்யும், இறைவனின் மேல் அன்பையும் வளர்த்து நம்மையும் ஓங்கச் செய்யும். மேலும், மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்வது போல் இறைவனைப் பாமாலைகள் மூலமாக ஏற்றி, போற்றி, புகழ்ந்து பாடி வழிபாடு செய்யப்படுவதே தோத்திரம் ஆகும். தோத்திர நூல்களில் மிகவும் புகழும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சிறப்பும் பெற்று விளங்குவது ‘பன்னிருதிருமுறைகள்’, ‘நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்’ ஆகும்’ (உமாபதிசிவம், 1995, ப:8).

நாயன்மார்கள் எனப்படுபவர்கள் சிவனை முழுமுதற்கடவுளாகத் துதித்துப் போற்றுபவர்கள். ஆழ்வார்கள் திருமாலை முழுமுதற்கடவுளாகப் போற்றிவருபவர்கள். அறுபத்திமூன்று நாயன்மார்களில் முதன்மையானவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆவார்கள். ‘திருஞானசம்பந்தர் அருளிய பாடல்கள் “திருக்கடைக்காப்பு” என்றும், திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் “தேவாரம்” என்றும், சுந்தரர் அருளிய பாடல்கள் “திருப்பாட்டு” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது’ (சிவஞானம். வீ, 2015, ப:13).

சோழ அரசர்களில் இரண்டாம் குலோத்துங்கனிடம் (கி.பி.1133-1150) அமைச்சராக இருந்த சேக்கிழார் பெருமான் சைவ அடியார்களின் மேன்மையை அரசனுக்கு உணர்த்தினார். உடனே, அரசன் சேக்கிழாரைக் கொண்டு திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை இயற்றினார். திருத்தொண்டர் புராணத்தில் குறிக்கப்பெற்ற சிவனடியார்கள் நாயன்மார்கள் என்று அழைக்கப்பெற்றனர். ‘இவர்களில், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோருடன் நாயன்மார் வரிசையில் சேர்க்கப்பெறாத மாணிக்கவாசகரையும் சேர்த்துச் சமயக் குரவர் நால்வர் என்று சைவ சமயம் போற்றுகின்றது’ (நாகப்பன், 2008, ப:96).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய பாடல்கள் கோயில்களில் பாடப்பட்டக் காலத்தில் வடக்கே இருந்து வந்த ஆரிய பிராமணர் வேத வேள்வியையும் சமஸ்கிருத மொழியையும் முன்னனிப்படுத்தி அரசர்களின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆதரவையும் பெற்றனர். இதனால் மூவர் பாடல்கள் திருக்கோயில் கருவறைகளிலிருந்து ஒதுக்கப்பட்டன. மூவர் பாடிய பதிகங்கள் தில்லைக் கோயிலில் ஓர் அறையில் பூட்டபட்டுக் கிடந்தன.

முதலாம் இராசராசன் (கி.பி 985-1014) நம்பியாண்டார் நம்பி என்னும் அடியாரின் துணைக்கொண்டு தில்லையில் இருந்து பதிகங்களை மீட்டார். சம்பந்தரின் பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசரின் பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாகவும்,சுந்தரர் பதிகங்கள் ஏழாம் திருமுறையாகவும், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர், கருவூத் தேவர், சேந்தனார், பூந்துருத்தி காடவா நம்பி, கண்டாராதித்தர், வேணாதடடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமா நம்பி, சேதிராயர் ஆகியோர் இயற்றிய பாடல்கள் ஒம்பதாம் திருமுறைகளாகவும் திருமூலர் இயற்றிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், திருவாலவுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரத் தேவர், கல்லாட தேவர், கபில தேவர், பரணதேவர், இளம்பெருமான் அடிகள், அதிரா அடிகள், பட்டினத்து அடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகியோர் பாடிய பாடல்கள் பதினோராம் திருமுறைகளாகவும், சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம் பன்னிரெண்டாம் திருமுறைகளாகவும் முறையே தொகுக்கப்பட்டன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

‘பன்னிருதிருமுறைகள் சைவ ஆகம நெறிப்பட்ட வழிபாட்டு முறைகளையும் சைவ சித்தாந்த நுண்பொருளையும் விளக்குவதோடு இறைவனைப் போற்றும் மந்திரங்களாகவும் விளங்குகின்றன. பன்னிருதிருமுறைகள் எழுந்த காலம் சைவசமய வரலாற்றின் பொற்காலம் ஆகும்’ என்று கூறப்படுகின்றது (நாகப்பன், 2008, ப: 82).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பன்னிருதிருமுறை வரிசையில் இடம்பெறும் நான்கு முதல் ஆறு வரையிலான திருமுறைகள், திருநாவுக்கரசரால் இயற்றப்பட்டவை ஆகும். 'திருநாவுக்கரசர் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரில் அவதரித்தார். வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியைச் சார்ந்த புகழனார் - மாதினியாருக்குப் பிள்ளையாக அவதரித்தார். இவரின் தமக்கையார் திலகவதி அம்மையார் ஆவார். இளமையில் பெற்றோர்கள் சூட்டிய பெயர் மருள்நீக்கியார் ஆகும். இளமையில் பெற்றோரை இழந்தவர். நிலையாமையுடைய வாழ்க்கையை வெறுத்தார். சிவ நெறியை உணர்ந்து நிற்பதற்குத் திருவருள் கிட்டமையால் சைவம் விட்டுச் சமணம் புகுந்தார்' (ஆறுமுகநாவலர், 1986:ப7).

பின்னர், சிவபெருமானின் அருளால் மீண்டும் சைவ சமயத்தைத் தழுவி சிவபெருமானுக்கு அடியாரானார். 'சிவபெருமானின் தலங்களுக்குச் சென்று பதிகங்கள் பாடுவதும், தலங்களைத் துப்புரவுச் செய்வதையுமே தம் தலையாயப் பணியாகக் கொண்டு இறைவனுடன் கலந்தார்'(வரதராசன். மு, 2009, ப:120). 'திருநாவுக்கரசர் பாடிய பாடல்கள் பல ஆயிரங்கள் இருந்தாலும், இப்போது கிடைக்கப்பெறுபவை 3066 பாடல்கள் மட்டும் ஆகும்'(வரதராசன். மு, 2009, ப:121). 'திருநாவுக்கரசர் பாடியவற்றுள் ஒரு பகுதி தாளத்துடன் கூடிய இசையொடு அமைந்த பாடல்கள் ஆகும். மற்றொரு பகுதி தாளம் இல்லாமல் இசையமைத்துப் பாடப்பட்டவையாகும்'(வரதராசன். மு, 2009, ப:119).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருநாவுக்கரசர் வாழ்க்கை நிலையாமையால் அலைக்கழைக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவர். இவர் பாடல்களில் இறை உணர்வும் தத்துவமே நிறைந்து காணப்பட்டன. சிவபெருமான் மீது கொண்டுள்ள அளவிலா பக்தியினாலும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


காதலினாலும், இவருடைய திருமுறை பாடல்களில் அழகியல் சிந்தனையும் வெளிப்பட்டுள்ளன.

கலை, அழகு போன்ற பற்றிய பல கருத்தாக்கங்கள் முன் வைக்கப்பட்டிருப்பினும் இதுதான் கலை அல்லது இதுதான் அழகு, என்று தீர்மானிக்கப்பட்ட வரையறையானது அன்று முதல் இன்று வரை விவாதத்திற்கு உரியதாகவே உள்ளது. எனினும், 'அவ்வாறான வரையறையை உருவாக்கவே, அழகியலாளர்களும், கலைஞர்களும் முயன்று வருகின்றனர்'(அனுசுயா. சு, 2009, ப:112).

கலைப்படைப்புகளின் பங்களிப்புகள் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டுள்ளன. கலையும் அழகும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவையாகும். கலைப்படைப்பில் அமைந்த வினைத்திறனிலும் அதன்வழி எழும் உணர்ச்சி ஒழுங்கிலுமே அழகானது உணரப்படுகின்றது. 'கலைஞன், சுவைஞன் இருவரையும் இணைக்கும் கருவியாக அமைவது கலை. காரணமாக அமைவது அழகு. எனவேதாம், கலையழகு என்பது 'Artistic Beauty' என்றும் கலையில் அழகியல் என்பது 'Aesthetics of Arts' என்றும் அழகியலாளர்களால் கூறப்படுகின்றது' (அனுசுயா. சு, 2009, ப:113).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

'அழகியல் என்பது எங்கும் பரந்துபட்ட அழகாகும். வரையறைக்குள் கொண்டுவர இயலாத இவ்வுணர்வு தனிப்பட்டவரின் மனம் புலனறிதலுக்கு ஏற்றவாறு அமைவது ஆகும். காலந்தோறும் வாழ்க்கை கலையின் மீது வைக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அழகியல் அன்றாடம் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது' (சச்சிதாந்தன். வை, 1992, ப:43).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இயற்கையிலும் கலையிலும் உள்ள அழகினை, அதன் பண்பினை, அதன் நிலையிலேயே விதிமுறைமுறைகளுடன் ஆராய்வதும் அழகியல் ஆகும். 'அழகியல் அணுகுமுறை ஓர் இலக்கியத்தில் உள்ள சிறப்புகளை எடுத்துரைக்க வல்லது' என்று ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார் (உமா மகேஸ்வரி. மா, 2008, ப:43). அவ்வகையில், தேவாரங்களில் உள்ள அழகினையும் அதன் பண்பினையும் அதன் நிலையிலேயே கண்டறிய "திருநாவுக்கரசர் பாடல்களில் அழகியல்" என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 1.3 ஆய்வுச் சிக்கல்

திருநாவுக்கரசர் தாசமார்க்கத்தைப் பின்பற்றியவர் ஆவார். ஆகையால், உளவியல் அடிப்படையில் அவரின் மனதில் பிற சமயம் சென்று சேர்ந்தது பற்றிய குற்ற உணர்ச்சி இருக்கின்றதா, உளவியல் அடிப்படையில் திருநாவுக்கரசர் பாடல்களில் காணப்படும் கூறுகள் யாவை என்பது பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ள அவருடைய வரலாற்றுப் பின்புலம் பயன்படும். ஆனால், தாசமார்க்கத்தை மேற்கொண்ட ஒருவர் இவ்வுலகை மற்றும் இறைவனை அழகியல் உணர்வோடு பார்த்திருக்கின்றாரா என்பது ஆய்விற்குரிய ஒரு கருத்தாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இறைச்சிந்தனை, உளவியல் ஆகியவற்றை திருநாவுக்கரசரின் பக்தி மற்றும் வாழ்க்கையின் நிகழ்வைக் கொண்டு ஆராய வழிகள் உள்ளன. அழகியல் நோக்கில் திருநாவுக்கரசர் பாடல்களை அணுகி, திருநாவுக்கரசர் பாடல்களில் அழகியல் கூறுகள் உள்ளனவா, அழகியல் கூறுகள் எவற்றை மையப்படுத்தி அமைந்துள்ளன என்பதை ஆராய்வதே இந்த ஆய்வின் சிக்கலாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இச்சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டு, “திருநாவுக்கரசர் பாடல்களில் அழகியல்” என்ற ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 1.4 ஆய்வின் முக்கியத்துவம்

“திருநாவுக்கரசர் பாடல்களில் அழகியல்” என்ற தலைப்பிலான ஆய்வை மேற்கொள்வதன் வழி திருநாவுக்கரசர் பாடல்களில் வெளிப்பட்டுள்ள அழகியல் சிந்தனையைக் கண்டறியபட்டது. அழகியல் கண்ணோட்டத்தில் இவ்வாய்வை மேற்கொள்வதன் வழி திருநாவுக்கரசர் பாடல்களில், சிவபெருமானின் தோற்றப்பொலிவு, திருத்தலங்களில் இயற்கைச் சூழல் போன்ற கருத்துகளை மிக நுட்பமான முறையில் கண்டறியப்பட்டது. திருநாவுக்கரசரின் வரலாறு, இறைத்தொண்டு, சைவ சமயத்தின் மேன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ள இவ்வாய்வு துணை நின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அழகு என்றால் எத்தகைய இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை இவ்வாய்வின் வழி அறிய இயலும். கண்களால் பார்த்து இதுதான் அழகு என நின்றுவிடாமல் அதன் பயன்பாட்டின் நோக்கத்தையும் அறிந்தே அதுவும் அழகானது என இம்மானுவேல் காண்ட் தமது அழகியல் கோட்பாட்டின் வறையரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆய்வு உலகத்திற்கு, மேலை நாட்டு கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் தமிழ் இலக்கியங்களை ஒரு புதிய கண்ணோட்டத்தில் வெளிப்படுத்தும் வகையில் இவ்வாய்வு துணை புரியும். ஆய்வு உலகத்திற்கு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இவ்வாய்வு ஒரு முன்னோடியாகத் திகழும் எனலாம்.. மேலும், இவ்வாய்வின் வழி சிவபெருமானின் சிறப்பு, திருநாவுக்கரசரின் சைவ நெறி, திருநாவுக்கரசர் திருமுறைகளில் இயற்கை வருணனை ஆகியவை அழகியல் நோக்கில் ஆராயப்பட்ட ஒரு புதிய ஆய்வாக அமையும்.

ஆய்வாளர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் முந்தைய ஆய்வாகவும் இவ்வாய்வு திகழும். மேலும், இவ்வாய்வின் வழி திருநாவுக்கரசர் பற்றின கருத்துக்கள், நான்காம் திருமுறைகளில் அழகியல் சிந்தனை முதலிய கூறுகளைக் கண்டய உறுதுணையாக அமையும். மேலை நாட்டு கோட்பாடு, தமிழ் இலங்கியங்களில் எத்தகைய ஏற்புடைமையைத தாங்கி வந்துள்ளதை இவ்வாய்வு ஒரு முந்தைய ஆய்வாக அமையும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.5 ஆய்வு நோக்கம்

இவ்வாய்வானது கீழ்க்காணும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

I. திருநாவுக்கரசர் பாடல்களில் அழகியல் கூறுகளை அடையாளங் காணுதல்.
II. திருநாவுக்கரசர் பாடல்களில் உள்ள அழகியலின் தன்மைகளை ஆராய்தல்.
III. திருநாவுக்கரசர் பாடல்களில் இயற்கை அழகியலை ஆராய்தல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.6 ஆய்வு வினா

இவ்வாய்வின் இறுதியில் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் காணப்படும்.

i. திருநாவுக்கரசர் பாடல்களில் அழகியல் கூறுகள் வெளிப்படும் இடங்கள் யாவை?
ii. திருநாவுக்கரசர் பாடல்களில் அழகியலின் தன்மைகள் எவ்வாறு வெளிப்பட்டிருக்கின்றன?
iii. திருநாவுக்கரசர் பாடல்களில் இயற்கை அழகியல் எவ்வாறு வெளிப்பட்டிருக்கின்றன?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.7 ஆய்வின் எல்லை

இவ்வாய்விற்குத் திருநாவுக்கரசர் பாடிய 312 பதிகங்களில் ஆய்வு எல்லையையும் கால அவகாசத்தையும் கருதி திருநாவுக்கரசரின் நான்காம் திருமுறையில் 42 பதிகங்கள் மட்டுமே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாய்விற்கு 2015 ஆம் ஆண்டில் வீ.சிவஞானம் அவர்களால் இயற்றப்பட்ட திருநாவுக்கரசர் தேவாரம் எனும் முதல் பகுதி நூலில் தொகுக்கப்பட்ட நாற்பத்து இரண்டு பதிகங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.8 ஆய்வு ஆதாரங்கள்

ஆய்விற்கு இரண்டு வகையான தரவுகளின் அடிப்படையில் ஆய்வு மூலங்கள் சேகரிக்கப்பட்டன. முதன்மை ஆதாரங்களும் துணைமை ஆதாரங்களும் ஆய்வின் ஆதாரங்களாகத் திகழ்கின்றன.

### 1.8.1 முதன்மை ஆதாரம்

சொல்லரசு புலவர் வீ. சிவஞானத்தின் முதலாம் தொகுதியின் நான்காம் திருமுறையில் உள்ள திருநாவுக்கரசர் பாடிய நாற்பத்து இரண்டு பதிகங்கள் இவ்வாய்வின் முதன்மை ஆதாரம் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.8.2 துணைமை ஆதாரம்

திருநாவுக்கரசர் பாடல்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றவை துணைமை ஆதாரங்கள் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi